Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular letter No/GR/34/2021**

# ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

"ஏனெனில், அந்த ஆண்டு யூபிலி ஆண்டு; அது உங்களுக்குத் தூயது" (லேவி 25:12). என்ற இறைநூல் வார்த்தைப்படி கன்னியாகுமரி மறைதொண்டுதளம் மறைமாவட்டமாக உயர்த்தப்பட்டதன் 25வது ஆண்டு வெள்ளிவிழாவை கொண்டாடி மறைமாவட்டத்தை தூயதாக்குகின்ற இவ்வேளையில் திருபாடல்கள் ஆசிரியர் கூறுவதுபோல "ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே; இன்று அக்களிப்போம்; அகமகிழ்வோம்" (திபா 118:24) என மறைமாவட்ட மக்களாகிய நாம் அனைவரும் அகமகிழ்ந்து மறைமாவட்ட வெள்ளிவிழா கொண்டாட்டத்தல் பங்கேற்று வருகிறோம். சங்ஙனாச்சேரி மறைமாநிலத்தின் மறைத்தொண்டு தளமாக இருந்த கன்னியாகுமரி மறைத்தொண்டுத்தளத்தை திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் அவர்கள் தக்கலை மறைமாவட்டமாக 1996 நவம்பர் 11 ம் தேதி அன்று உயர்த்தினார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது வரலாற்று ஆணை வழியாக 2017 அக்டோபர் 9ம் தேதி அன்று சீரோ-மலபார் திருச்சபையின் நிராகரிக்கப்பட்ட 'அகில இந்திய மறைபரப்பு உரிமை' யை சீரோ-மலபார் திருச்சபைக்கு வழங்கி நமது மறைமாவட்டத்தின் மறைபரப்பு எல்லையை தமிழ்நாட்டின் 9 மாவட்டங்களை ஒருங்கிணைத்து விரிவுபடுத்தினார். நாம் இன்று மறைமாவட்டப் பணிகளின் 25 வருடங்களை கடந்து வந்துள்ளோம். எனவே இவ்வேளையில் நாம் மனநிறைவோடு இறைவனுக்கு நன்றி செலுத்தி அதை கொண்டாடுவதோடு, இறைவன் நமக்கு அளித்த அனைத்து கொடைகளுக்குமாக அவருக்கு நன்றி செலுத்துவோம்.

நாம் 2019 நவம்பர் 10 அன்று நமது வெள்ளிவிழா கொண்டாட்டங்களை இருவருடங்களாக விரிவுப்படுத்தி ஆடம்பரமாக தொடங்கி வைத்தோம். நம்மை நல்வழியில் நடத்தவும் கொண்டாட்டங்களுக்கு பெரும் முக்கியத்துவம் கொடுக்கும் விதமாகவும் திருவிவிலியத்தின் அடிப்படையில் இறை ஈசோவின் வார்த்தைகளான "ஆழத்தில் வலைப்போடுங்கள் - Duc in Altum" (லூக் 5:4) என்ற இறைவார்த்தையை மையக்கருத்தாக கொண்டு இவ்யூபிலி விழாவை கொண்டாடி வருகின்றோம். புனித பேதுருவும் அவரது தோழர்களும் இறைவனில் பற்றுதி கொண்டு இறைவேண்டுதலால் தங்களது சங்கலிகளை

தகர்த்தெறிந்தனர். அவ்வாறே திருத்தூதர்கள் “அப்படியே அவர்கள் செய்து பெருந்திரளான மீன்களைப் பிடித்தார்கள்” (லூக் 5:6) என திருவிவிலியம் கூறுகிறது. ‘ஆழத்தில் வலை போடுங்கள்’ என்ற இறைவார்த்தைகள் இன்றும் நமது காதுகளில் முழங்குகின்றது. கடந்த காலத்தை நன்றி உணர்வோடு நினைப்பதற்கும் நிகழ் காலத்தில் புத்துணர்வோடு செயல்படவும் எதிர்காலத்தில் நம்பிக்கையுடனும் மனவுறுதியுடனும் முன்னேறவும் இது நம்மை அழைக்கிறது. எல்லாவற்றிற்க்கும் மேலாக “இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றுமே மாறாதவர்” (எபி 13:8) என்ற உண்மையை நாம் அறிவோம்.

‘ஆழத்தில் வலை போடுங்கள்’ என்ற இறைவார்த்தை இவ்வெள்ளிவிழா ஆண்டில் நமது விசுவாசத்தை ஆழப்படுத்துவதோடு விட்டுவிடாமல் இறைவார்த்தை உலகெங்கும் பரவப்பட வேண்டும் என்பதையும் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக வாழ வேண்டும் என்பதையும் உணர்த்துகிறது. அவ்வாறே ஆழத்தில் வலைப்போடுங்கள் என்ற இறையழைத்தல் நமது மறைமாவட்டத்தை ஆன்மீக பாதையில் கட்டியெழுப்பவும் நம்மைச் சுற்றி வாழுகின்ற சகோதர சகோதரிகளுக்கு நன்மை செய்யவும் அவர்களை பாதுகாக்கவும் அழைப்பு விடுக்கிறது.

நமது வெள்ளிவிழா கொண்டாட்டத்தின் முக்கிய காரணிகளை கீழே குறிப்பிடுகின்றேன்.

- மறைமாவட்டம் என்னும் நிலையில், அருட்பணியாளர்கள் அருட்சகோதரிகள் பொதுநிலையினர் என்னும் நிலைகளில் நமது விசுவாச வாழ்வில் நாம் ஆழம் பெற்று வளர்ச்சி அடைய வெள்ளிவிழா உதவியது.

- வெள்ளிவிழா கொண்டாட்டம் மறைபரப்பு பணியில் உள்ள நமது ஆர்வத்தையும் விருப்பத்தையும் அதிகரிப்பதோடு நமது மறைமாவட்ட விரிவாக்கப்பட்ட பகுதிகளில் மறைத்தொண்டு பணிகளிலுள்ள நமது ஆர்வத்தையும் கவனத்தையும் அதிகரிக்கவும் செய்கிறது.

- மறைமாவட்டத்தில் பொதுநிலையினருடைய தலைமைத்துவ பண்பை வளர்க்க இது உதவுகிறது.

- மறைமாவட்ட மக்களை சீரோ-மலபார் திருச்சபையின் வழிபாட்டு முறைகளை ஏற்றுக்கொண்டு இத்திருச்சபையின் மரபுக்கேற்ப வாழ இது உதவுகிறது.

நாம் இப்போது நமது இரண்டு வருட வெள்ளிவிழா கொண்டாட்டத்தின் நிறைவு பகுதிக்கு வந்துள்ளோம். வெள்ளிவிழா கொண்டாட்டம் நிறைவு விழாவானது 2021 நவம்பர் 14 ம் தேதி அன்று நமது மறைமாட்டத்தில் நடைபெறுகிறது. 2019 நவம்பர் 10 அன்று நமது வெள்ளிவிழா இரு வருட கொண்டாட்டங்களின் தொடக்கவிழா படந்தாலுமூட்டில் வைத்து நடைபெற்றதை நாம் அனைவரும் அறிவோம். அவ்வேளையில், வெள்ளிவிழா ஆயத்த செபங்களும், விளம்பர பலகைகளும், ஆலயத்தில் திருப்பலி வேளையில் தீபம் ஏற்றுவதற்காக வெள்ளிவிழா மெழுகுவர்த்தியும் வழங்கப்பட்டது. வெள்ளிவிழாவின் தொடக்கவிழா பங்களவில் 2019 நவம்பர் 24 அன்று கொண்டாடப்பட்டது. கடந்த இரண்டு வருடங்களாக வெள்ளிவிழா சிறப்பு மன்றாட்டுகளை நமது ஆலயங்களில் செபித்து வந்தோம். மறைமாவட்ட அளவில் செயல்முறைத்திட்டம் உருவாக்கி நமது ஆன்மீக

வாழ்வை ஒழுங்குபடுத்தியதோடு அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள் மற்றும் பொதுநிலையினர் ஆகியோரின் வாழ்வை திடப்படுத்த செயல்திட்டங்கள் வழியாக உதவிசெய்தோம். பக்த சங்கங்களின் துணையுடன் பல விசுவாசப்பயிற்சி நிகழ்வுகள் வழியாக நமது ஆன்மீக வாழ்வை மேம்படுத்தியதோடு நற்செய்திக்கு சாட்சிகளானோம். வெள்ளிவிழா சிறப்பு நிகழ்ச்சிகள் அனைத்தும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பொதுநிலையினர் என்னும் நமது அர்ப்பண வாழ்வின் நிலைகளில், நமது தூய வாழ்வின் இலக்கை அடையும் விதமாக இது அமைந்தது.

தொடக்கத்தில் அனைத்து நிகழ்வுகளும் மறைமாவட்ட பக்த சங்கங்கள் வாயிலாக நடைபெற்றது. கொரோனா நோயின் ஆதிக்கத்தால் ஊரடங்கு காலத்தில் வழிபாட்டு தலங்கள் மூடப்பட்டபோதிலும் நமது வெள்ளிவிழா கொண்டாட்ட நிகழ்வுகள் தொலைதொடர்பு ஊடகங்கள் வாயிலாக நடைபெற்றுவந்தது. இருப்பினும் நாம் நடத்த இருந்த சில நிகழ்வுகள் நடத்த முடியாமல் போயிற்று. ஆயினும் விடுபட்ட சில நிகழ்வுகள் இனி வருகின்ற வருடங்களில் அதை நடைமுறைப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்படும். வெள்ளிவிழா நிறைவு கொண்டாட்டத்தின் முன்னோடியாக ஒருமாத காலமாக நாம் தீவிர தயாரிப்பு நடத்தி வருகின்றோம். செப்டம்பர் 30, 2021 அன்று மறைமாவட்ட அளவில் இறைவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் நன்றி திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் நமது ஆலயங்களில் ஒப்புக்கொடுத்தோம். நமது அருட்தந்தையர்கள் தங்களது வருடாந்திர தியானத்தை அக்டோபர் மாதத்தில் நடத்தினார்கள். மறைமாவட்ட மக்களை தொலைதொடர்பு ஊடகங்கள் வழியாக மறைவட்ட வாரியாக நான் சந்தித்து உரையாடினேன். மறைமாவட்டம் முழுவதும் சங்கலி செபமாலையானது அக்டோபர் 24, 2021 அன்று நடத்தப்பட்டது. இரு மணிநேர தொடர் நற்கருணை ஆராதனை அக்டோபர் மாதம் 25 தேதி முதல் 28ம் தேதி வரை நமது அனைத்து ஆலயங்களிலும் மறைத்தொண்டு தளங்களிலும் நடைபெற்றது. நிறைவாக, மறைமாவட்ட மக்கள் அனைவரும் தங்களை புதுப்பிக்கும் நோக்குடன் நவம்பர் 5, 6, 7 ஆகிய நாட்களில் தொலைதொடர்பு ஊடகம் வழியாக நற்செய்தி பெருவிழா நடத்தப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட அனைத்து நிகழ்வுகளும் கடவுளுக்கு நன்றி செலுத்த மக்களுக்கு உதவி செய்தது என்பதை நான் முழுமையாக நம்புகின்றேன்.

நமது மறைமாவட்டத்தில் வெள்ளிவிழா கொண்டாட்டத்திற்கு முன் மேலும் மூன்று முக்கிய நிகழ்வுகள் உள்ளன. நவம்பர் 12, 2021 அன்று நிகழ்நிலை (Online) விவிலிய வினாடி போட்டி நடைபெறும். நவம்பர் 13, 2021 அன்று நமது உயர்பேராயர் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்களின் ஆயர்பட்ட வெள்ளிவிழா கொண்டாட்டமானது நமது மறைமாவட்டத்தில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் மறைமாவட்ட பிரதிநிதிகள் ஆகியோரின் முன்னிலையில் கொண்டாடப்படும். நவம்பர் 14, 2021 அன்று மறைமாவட்ட வெள்ளிவிழாவின் நிறைவு மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசாள் ஆலயத்தில் வைத்து உயர்பேராயர் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்களின் தலைமையில் கன்னியாகுமரி மாவட்ட ஆயர்களோடு இணைந்து ஆடம்பர திருப்பலி நடைபெறும். அதைத்தொடர்ந்து சுமார் 11 மணிக்கு வெள்ளிவிழா நிறைவு பொதுக்கூட்டம் மஞ்சாலுமூட்டில் வைத்து நடைபெறும். இவ்விழாவானது தொலைதொடர்பு ஊடகங்கள் வழியாக மக்களுக்கு நேரலையாக வழங்கப்படும். எனவே அன்பான இறைமக்களே

வெள்ளிவிழா நிறைவு நாளான நவம்பர் 14ம் தேதி அன்று உங்கள் பங்குகளில் நன்றி திருப்பலி அர்ப்பித்து, காலை சுமார் 11 மணி அளவில் தொலைதொடர்பு ஊடகங்கள் வழியாக ஒளிப்பரப்பப்படும் உயர்பேராயர் தலைமையிலான வெள்ளிவிழா நிகழ்வுகளில் கலந்துகொள்ள உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மறைமாவட்ட ஆராதனை வழிபாட்டுக்குழு மூன்று வழிபாட்டு புத்தகங்களை தயாரித்து வெள்ளிவிழா நிறைவு கொண்டாட்ட வேளையில் வெளியிடுகிறது. 'விண்பாதையில்' என்ற ஒரு பாடல் புத்தகமும், அருட்தந்தையர் அர்ச்சிப்புக்காக பயன்படுத்தும் 'ஆசியுரைகளும் மந்திரிப்புகளும்' என்னும் புத்தகமும், இறந்தோர்களுக்கான 'இறுதிச் சடங்குகள்' என்னும் புத்தகமும் வெளியிடப்படுகிறது. இத்தோடு மறைமாவட்ட வரலாற்றுப்புத்தகமும், ஒரு வழிபாட்டு இசை ஒலிநாடாவும் வெளியிடப்படும். இவ்வேளையில் இவைகளை தயாரிக்க பாடுபட்ட அனைவரையும் நன்றியோடு நினைக்கின்றேன்.

சீரோ-மலபார் திருச்சபை தனது திருப்பலி வழிபாட்டு முறையில் சிறுமாற்றங்கள் ஏற்படுத்தியதோடு திருப்பலி புத்தகத்தை புதுப்பித்து அதற்கான அங்கீகாரத்தை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களிடமிருந்து பெற்றுள்ளது. இப்புது திருப்பலி வழிபாட்டு முறையானது நவம்பர் 28, 2021 அன்று முதல் நமது திருச்சபையில் நடைமுறைக்கு கொண்டுவரப்படும். எனவே, அருட்தந்தையர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கேற்ப நவம்பர் மாதம் 28-ம் தேதி முதல் நமது மறைமாவட்டத்தில் புதுப்பிக்கப்பட்ட திருப்பலி வழிபாட்டு முறையானது நடைமுறைக்கு கொண்டுவரப்படும். அன்பான இறைமக்களே வழிபாட்டு முறைகளின் மாற்றி அமைக்கப்பட்ட முறைகளை அறிந்து அதற்கேற்ப திருப்பலி நிறைவேற்ற நீங்கள் உங்களையே தயார் செய்துகொள்ள வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வேளையில் வெள்ளிவிழா கொண்டாட்டத்தின் இருவருட ஆயத்தங்களுக்காக அயராது உழைத்த அனைத்து அருட்தந்தையர்களையும் அருட்சகோதரிகளையும் பொதுநிலையினரையும் நன்றியோடு நினைவு கூர்ந்து இவ்வேளையில் இறையாசிக்காக செபிக்கின்றேன்.

இறைவன் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் உங்கள் பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
05.11.2021

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

✞ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் **SDB**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

இச்சுற்றுமடல் அனைத்து ஆலயங்களிலும் நவம்பர் 7, 2021 ஞாயிறு அன்று திருப்பலிக்குபின் வாசிக்க வேண்டும்.